**தெரணியகல பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்தெம்பர் 18 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தெரணியகல பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கை

கணக்குகளைத் தயாரிக்கும் போது பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை தொடர்பான விபரங்கள் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) சப்ரகமுவ மாகாண பிரதம செயலாளருக்குரிய மூன்று வாகனங்களின் பெறுமதியான ரூபா 5,785,875 தொகை நிலையான சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக நிலையான சொத்துக்கள் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சில வருடங்கள் முதல் ஐந்தொகையில் அறவிடக்கூடிய பயன்பாட்டுச் சேவையின் கீழ் காசு மற்றமாக காண்பிக்கப்பட்ட ரூபா 512,000 மீதியைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்திட்டத்திற்காகக் கிடைத்த ரூபா 190,000 தொகையான மூலதனப் பெறுவனவுகள், பொது வைப்புக் கணக்கின் மூலம் செலவிடப்பட்ட காரணத்தால் அது மூலதன வருமானம் மற்றும் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டில் நன்கொடையாகக் கிடைத்த பீ.வீ.சீ குழாய் இருப்புக்களின் பெறுமதியான ரூபா 728,750 இனை மீளாய்வாண்டின் போது கணக்குகளுக்குக் கொண்டுவரும் போது நன்கொடைக் கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

03 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10,352,541 ஆக இருந்ததுடன் உபயோகப் பதிவேடுகள் / அறிக்கைகளின் படி கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,916,461 ஆனமையால் இணக்கஞ் செய்யப்படாத வேறுபாடு ரூபா 6,436,080 ஆகும்.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய பெறவேண்டிய கணக்கு (முற்கொடுப்பனவுகள்) மீதிகளின் பெறுமதி ரூபா 955,216 ஆக இருந்ததுடன் 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,611,743 ஆக இருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,623,558 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,712,146 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 5,088,588 தொகையான வீழ்ச்சி காணப்பட்டது.

### 2.2 நிதிக்கூற்றுக்களின் பகுப்பாய்வுரீதியான மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் இணக்கஞ் செய்த போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளின் வீழச்சிக்கு பிரதானமாக ஆதனவரி வருமானம் குறைவடைந்தமையும் சம்பளம், படிகள், வழங்கல் மற்றும் உபகரணங்கள், மூலதன சொத்தக்களின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவினம் அதிகரித்தமை தாக்கமளித்திருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 5,895 | 5,380 | 515 |
| (ii) | வாடகை | 5,093 | 4,094 | 999 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 552 | 647 | 94 |
| (iv) | ஏனைய வருமானம் | 17,257 | 14,059 | 3,198 |

**2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் 02 நீதவான் நீதிமன்றங்களிலிருந்து 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் கணிப்பிடப்பட்டு அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 ஏக்கர் வரி**

நீண்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற ரூபா 175,922 தொகையான ஏக்கர் வரி 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்ககப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

ஊழியர் கடன் பதிவேட்டின் படி, 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவிட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,198,322 ஆக இருந்ததுடன் 01 வருட காலத்தை விஞ்சிய அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 219,212 ஆக இருந்தது.

**3.2 ஒப்பந்த நிருவாகம்**

துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் 2011 ஆம் அண்டின் வீதி அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்குரிய கொடுப்பனவுகள் அந்த ஆண்டுகளின் போது செலுத்தித் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் குறைபாடுகளுடன் கொடுப்பனவுப் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டமையாலும் ஒப்பந்தக்காரர்களின் தாமதத்தின் காரணமாகவும் வேலைகளுக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 500,000 தொகையை 2013 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் சபை மீளளிப்புச் செய்திருக்கவில்லை.

**04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

1988 இன் (பிரதேச சபை) நிதி மற்றும் நிருவாக விதிக் கோவையின் 5(7) இன் படி காசு மற்றும் களஞ்சியங்கள் தொடர்பில் போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) இருப்புக் கட்டுப்பாடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்